இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 09-04-2025

# அது அழுகை அல்ல!

‘எவ்வளவு கொடுத்தாலும் சிலர் அழுது கொண்டே இருக்கிறார்கள்’ என்று புலம்பி இருக்கிறார் இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி. ‘எவ்வளவு கொடுத்தாலும்...’ என்று சொல்லும் அவர் எவ்வளவு கொடுத்தோம் என்பதைப் பட்டியல் போட்டிருந்தால் பாராட்டலாம். எதுவும் கொடுக்காத நிலையில் அவரால் எப்படி பட்டியல் போட முடியும்?

தமிழ்நாடு எழுப்புவது அழுகை அல்ல, உரிமை. உரிமைக் குரலுக்கும் ஒப்பாரிக்கும் வேறுபாடு தெரியாதவர் இந்திய நாட்டின் பிரதமராக அமர்ந்திருப்பது இந்தியாவுக்குத் தலைகுனிவு ஆகும்.

**⁎ மூன்று இயற்கை பேரிடர்களை தமிழ்நாடு சந்தித்துள்ளது. மாநில அரசு கோரிய 37,906 கோடி ரூபாய். இதில் எவ்வளவு நிதியைக் கொடுத்துள்ளேன் என்று பிரதமர் சொன்னாரா? இல்லை!**

**⁎ ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்துக்கான நிதியான ரூ.2152 கோடியைக் கொடுத்துவிட்டேன் என்று பிரதமர் சொன்னாரா? இல்லை!**

**⁎ சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டப் பணிகளுக்காக ரூ.60 ஆயிரம் கோடியில் பாதியைக் கொடுத்து விட்டேன் என்று சொன்னாரா பிரதமர்? இல்லை!**

**⁎ தமிழ்நாடு வரியாகக் கொடுப்பதில் பாதிக்கும் மேல் தமிழ்நாட்டுக்கு தந்துவிட்டேன் என்று சொன்னாரா பிரதமர்? இல்லை!**

**⁎ தமிழ்நாட்டுக்கு எய்ம்ஸ் மருத்துவமனையை ஏழு ஆண்டுகளுக்கு முன்பு அறிவித்தேன், வாருங்கள் அந்த கம்பீரமான கட்டடத்தைக் காட்டுகிறேன் என்று அழைத்தாரா பிரதமர்? இல்லை.**

**எந்தச் சாதனையையும் சொல்லாமல், ‘மூன்று மடங்கு கொடுத்தோம்’, ‘ஏழு மடங்கு கொடுத்தோம்’, ‘பத்து மடங்கு கொடுத்தோம்’ என்று வாயால் வடை சுட்டுவிட்டுப் போயிருக்கிறார் பிரதமர்.**

ஒன்றிய அரசின் சார்பில் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படும் திட்டங்கங்களுக்கும் தமிழ்நாடு அரசுதான் நிதி அளித்து வருகிறது. எத்தனையோ லட்சம் பேருக்கு குடிநீர் இணைப்பு கொடுத்ததாக பிரதமர் சொல்லி இருக்கிறார். ஒன்றிய அரசு வீடுதோறும் குடிநீர் (Jal Jeevan Mission) என்ற திட்டத்தை வைத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ்வழங்கவேண்டிய 4,142 கோடி ரூபாயில், 732 கோடிரூபாயை மட்டுமே வழங்கியுள்ளது.

நிதியின்மையினால் திட்டங்களின் செயல்பாடு சுணங்கக் கூடாது என்பதால் தமிழ்நாடு அரசு நிதியை கொடுத்து இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது **என்பது பிரதமருக்குத் தெரியுமா?**

ஒன்றிய அரசின் சார்பில் வீடு கட்டித் தருவதாக பிரதமர் சொல்லி இருக்கிறார். ஒன்றிய அரசின் திட்டமான பிரதமர் நகர்ப்புர வீட்டுவசதித் திட்டத்தின் (PMAYU), கீழ் வழங்கப்படும் மானியத் தொகையானது, 2016 ஆம் ஆண்டு முதல் இன்று வரை, 1.5 இலட்சம் ரூபாயாகவே இருக்கிறது. இத்திட்டத்தினைச் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு அரசானது, வீடுஒன்றிற்கு 12 முதல் 14 இலட்சம் ரூபாயை தன் சொந்த நிதியின் மூலம் மானியமாகக் கொடுத்து, ஏழ்மை நிலையில் இருக்கும் மக்களின் சொந்தவீட்டிற்கான கனவினை நிறைவேற்றியுள்ளது. **இதனை பிரதமர் அறிவாரா?**

ஒன்றிய அரசின் பிரதமர் ஊரக வீட்டுவசதித் திட்டத்தின் (PMAY G) கீழ் வழங்கப்படும் மானியத் தொகையானது, வீடு ஒன்றிற்கு 0.72 இலட்சம் ரூபாயாக, எட்டு வருடங்களுக்கும் மேலாக இருந்து வருகிறது. ஆனால் தமிழ்நாடு அரசு, வீடு ஒன்றிற்கு 1.72 இலட்சம் ரூபாயை மானியமாக வழங்கி வருகிறது. தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் ‘கலைஞர் கனவு இல்லம்’ திட்டத்தின் கீழ், மாநில அரசின் மானியமானது 3.53 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது. இது, ஒன்றிய அரசு தன்னுடைய திட்டத்திற்கு வழங்கும் மானியத்துடன் ஒப்பிடுகையில் ஐந்து மடங்கு அதிகம். **இதனை பிரதமர் அறிவாரா?**

**திட்டம் தான், ஒன்றிய அரசின் திட்டம். ஆனால் அதற்கும் நிதி தருவது தமிழ்நாடு அரசு. ‘அவருக்குத் தான் கல்யாணம், ஆனால் சட்டை என்னுடையது’ என்பது போல ‘செந்தில் காமெடி’யோடு ஆட்சி நடத்துவது யார்?**

“ இந்த திட்டத்தில் கையெழுத்துப் போட்டால் தான் இரண்டாயிரம் கோடி பணம் கிடைக்கும் என்றாலும் – பத்தாயிரம் கோடி பணம் கிடைக்கும் என்றாலும் போட மாட்டோம்.இரண்டாயிரம் கோடி பணத்துக்காக இன்று கையெழுத்துப் போட்டால் – இரண்டாயிரம் ஆண்டு பின்னோக்கி இந்த தமிழ்ச் சமுதாயம் போய்விடும்.அந்தப் பாவத்தை இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் செய்ய மாட்டான்” என்று சொன்னார். இந்தியாவில் இப்படி எந்த முதலமைச்சரும் பேசி இருக்க மாட்டார்கள். இது அழுகையா? உரிமையா? பிரதமருக்குச் செய்யப்பட்ட எச்சரிக்கை அல்லவா இது? இது கூடப் புரியவில்லையா?

தமிழ்நாடு அரசு செயல்படுத்திவரும் பல்வேறு திட்டங்களுக்கு ஒன்றிய அரசானது, மாநில அரசின் கொள்கைகளுக்கு எதிரான நிபந்தனைகளை விதித்து, அத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் சிரமங்களை உண்டாக்குவதோடு மட்டுமல்லாமல், அத்திட்டங்கள் முடங்கும் சூழ்நிலையையும் உருவாக்கியுள்ளது. இதைச் செய்யாதீர்கள் என்று சொல்வது உரிமையா? அழுகையா?

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வள்ளுவர் சொன்னார்...

**அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே**

**செல்வத்தைத் தேய்க்கும் படை** என்றார்.

இதற்கு முத்தமிழறிஞர் கலைஞர் எழுதிய விளக்கம்...

**கொடுமை பொறுக்க முடியாமல் மக்கள் சிந்தும் கண்ணீர்,... ஆட்சியை அழிக்கும் படைக்கருவி – என்பது ஆகும். இதனை இந்தியில் மொழி பெயர்த்து பிரதமர் அறிந்து கொள்ளட்டும்.**

●●



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு ஆளுநர் அவர்கள் ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்திருந்தது சட்டவிரோதமானது; அந்தச் சட்டமுன்வடிவுகளுக்கு ஆளுநர் அவர்களின் ஒப்புதல் அளிக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டுமென்றும் மாண்பமை உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது குறித்து சட்டமன்றப் பேரவையில் நேற்று (8.4.2025) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வரவேற்று உரையாற்றினார்.

### ஆளுநர் வழக்கில் உச்சநீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு!

# அனைத்து மாநிலங்களுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றி!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமித உரை!

**சென்னை, ஏப். 9 - “ஆளுநர் வழக்கில் உச்சநீதி மன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு அனைத்து மாநிலங்களுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றி” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டப்பேரவையில் இத்தீர்ப்பினை வரவேற்று பெருமிதத்தோடு குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு ஆளுநர் அவர்கள் ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்திருந்தது சட்டவிரோதமானது; அந்தச் சட்டமுன்வடிவுகளுக்கு ஆளுநர் அவர்களின் ஒப்புதல் அளிக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டுமென்றும் மாண்பமை உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது குறித்து சட்டமன்றப் பேரவையில் முதலமைச்சர் அவர்கள் பெருமிதத்தோடு ஆற்றிய உரை வருமாறு:-

அவைக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

சற்றுமுன்பு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை நமது தமிழ்நாடு அரசு பெற்றுள்ளது. இந்தச் சட்டமன்றப் பேரவையில் நாம் நிறைவேற்றி ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்த பல முக்கியமான சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் தராமல் திருப்பியனுப்பினார்.

அந்த நிலையில் அவற்றை நாம் மீண்டும் இங்கே நிறைவேற்றி அனுப்பி வைத்தோம். இரண்டாவது முறை சட்டமன்றப் பேரவை நிறைவேற்றிய சட்டமுன்வடிவுகளுக்கு ஆளுநர் அவர்கள் ஒப்புதல் அளித்தே ஆகவேண்டும் என்று அரசியல் சட்டம் வரையறுத்திருந்த போதிலும், இவற்றிற்கு ஒப்புதல் அளிக்காமல் ஆளுநர் அவர்கள் காலம் தாழ்த்தி வந்ததோடு, அதற்கு தனக்கு அதிகாரம் இருப்பதாகவும் தெரிவித்து வந்தார்.

**ஆளுநரின் சட்டவிரோதச் செயல்!**

இதனை எதிர்த்து தமிழ்நாடு அரசு மாண்பமை உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்ததில், தமிழ்நாடு அரசின் வாதத்தில் இருந்த நியாயத்தை ஏற்று, சட்டமுன்வடிவுகளை ஆளுநர் அவர்கள் நிறுத்தி வைத்திருந்தது சட்டவிரோதமானது என்றும், அந்தச் சட்டமுன்வடிவுகளுக்கு ஆளுநர் அவர்களின் ஒப்புதல் அளிக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டுமென்றும் தெரிவித்து, வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை இன்றைக்கு மாண்பமை உச்சநீதிமன்றம் வழங்கியுள்ளது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும்!**

இந்தத் தீர்ப்பு தமிழ்நாட்டிற்கு மட்டுமின்றி, இந்தியாவில் உள்ள அனைத்து மாநில அரசுகளுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயிர்க் கொள்கையான மாநில சுயாட்சி மற்றும் கூட்டாட்சித் தத்துவம் ஆகியவற்றை நிலைநாட்டிட தமிழ்நாடு போராடியது. தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### மாநில சட்டமன்றங்களின்

# உரிமையை நிலைநாட்டிய உச்சநீதிமன்றத்திற்கு நன்றி!

## பேரவையில் உறுப்பினர்கள் மேசையை தட்டி வரவேற்ற பலத்த ஒலிக்கிடையே – முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி உரை!

**சென்னை, ஏப். 9 - “மாநில சட்டமன்றங்களின் உரிமையை நிலைநாட்டிய உச்ச நீதிமன்றத்திற்கு நன்றி” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேரவையில் உறுப்பினர்கள் மேசையை தட்டி வரவேற்ற பலத்த ஒலிக்கிடையே முதல்வர் அவர்கள் நன்றி தெரிவித்து உரையாற்றினார்.**

தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் நடவடிக்கைகளுக்கு எதிராக மாண்பமை உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளதை வரவேற்று சட்டமன்றத்தில் அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க. தவிர்த்து, மற்ற கட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் உரையாற்றியதையடுத்து, சட்டமன்றப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நன்றி தெரிவித்து ஆற்றிய உரை வருமாறு: -

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்சநீதிமன்றத்தின் மூலமாக நாம் பெற்றிருக்கக்கூடிய தீர்ப்பினை வரவேற்று நம்முடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருக்கிறோம். அதேபோன்று, எதிர்க்கட்சியாக இருக்கின்ற அ.தி.மு.க. மற்றும் மத்தியில் ஆட்சி செய்கின்ற பா.ஜ.க. ஆகிய இரண்டு கட்சிகளையும் தவிர, மற்ற அனைத்துக் கட்சித் தலைவர்களும் மற்றும் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இங்கே பாராட்டியும், வாழ்த்தியும் பேசி அந்தத் தீர்ப்பினை வரவேற்று மகிழ்ந்திருக்கிறார்கள்.

இந்த நேரத்தில், நமது அரசமைப்புச் சட்டத்தில் மாநில சட்டமன்றங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கக்கூடிய உரிமைகளை நிலைநாட்டியதற்கு, தமிழ்நாடு அரசின் சார்பிலும், இங்குள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நம்மைத் தேர்ந்தெடுத்த தமிழ்நாட்டு மக்கள் அனைவரின் சார்பிலேயும் என்னுடைய மனமார்ந்த நன்றியை உச்ச நீதிமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் உருக்கத்தோடும், நெகிழ்ச்சியோடும் பேசினார்.

“தலைவர் கலைஞர் அவர்களின் மடியிலே நான் வளர்ந்தவன்” என்று அவர் சொன்னார். நீங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் மடியில் வளர்ந்தவர் என்று சொன்னபோது, நான் எண்ணியது, உங்கள் மடியிலே நான் வளர்ந்தவன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, கொள்கையிலே நிச்சயமாக, உறுதியாக இருப்பேன், இருப்பேன், இருப்பேன் என்கிற உறுதியோடு, இந்த மகிழ்ச்சியை நாம் வெளிப்படுத்தக் கூடிய வகையில் அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க. ஆகிய இரண்டு கட்சிகளின் உறுப்பினர்களைத் தவிர, மற்ற அனைவரும் மேசையைத் தட்டி நம்முடைய நன்றியைத் தெரிவிக்க வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)



தமிழ்நாடு ஆதிதிராவிட வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகத் தலைவராக (தாட்கோ) புதிதாகப் பொறுப்பு ஏற்றுள்ள மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் என்.இளையராஜா, நாகை மாவட்டம் திருக்குவளையில் உள்ள கலைஞர் பிறந்த இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கீழையூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் சோ.பா.மலர்வண்ணன், பொதுக்குழு உறுப்பினர் கோசி.குமார், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இளைஞர் அணி பி.என்.கார்த்தி, மாணவர் அணி ப.உதயக்குமார் மற்றும் பலர் உள்ளனர்.